RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

DOI: 10.34256/irjt2224s222310

# காட்சி ஊடகத்தில் சங்கத்தமிழ்

**ச. சுரேஷ் குமார்** [அ, *]

[அ] ஊடக கலைகள் துறை, புதுவைப் பல்கலைக் கழக சமுதாய கல்லூரி, பாண்டிச்சேரி-605008, இந்தியா

# Sanga Tamil in Visual Media

**S. Suresh Kumar** [a, *]

[a] Department of Visual Communication, Pondicherry University Community College, Puducherry-605008, India

* Corresponding Author: mailsureshkumarc@gmail.com

Received: 19-09-2022
Revised: 18-11-2022
Accepted: 13-11-2022
Published: 10-12-2022

**ABSTRACT**

Media has the power to make huge changes in society. People trust the media to the extent that they define food, clothing, culture, lifestyle through the media and especially the power of visual media such as film, television, advertisements, and the Internet which cannot be explained in words plays a major role in people's day-to-day life. Today media rules the whole world and it also led to the formation and overthrow of regimes in many countries. Through media even the opinion of a common man in a corner of the world is spread to all. When we look into telecasted television stories we can come to know that there are many story treasures that are poured in Tamil and English literature. It is a real fact that if we telecast the story of Sangam literary works in to Tamil cinema, the quality of Tamil cinema will be more refined than that of world cinema and it will become stronger.

**Keywords:** Sanga Tamil, Visual Media, Culture, Advertisements

## முன்னுரை

சமூகத்தில் மிகப்பெரிய மாற்றங்களை ஏற்படுத்தும் ஆற்றல் ஊடகங்களுக்கு உண்டு. ஊடகங்களை பார்த்து உணவு, உடை, கலாச்சாரம், வாழ்க்கை முறை, அனைத்தையும் வகுத்துக் கொள்ளும் அளவிற்கு ஊடகங்களை மக்கள் நம்புகிறார்கள், அவற்றிலும் குறிப்பாக காட்சி ஊடகங்களான திரைப்படம், தொலைக்காட்சி, விளம்பரங்கள், இணையம் ஆகியவற்றின் ஆற்றல் சொல்லில் விளக்க வைக்க முடியாதவை. ஊடகங்களை இன்று உலகை ஆள்கின்றன. பல நாடுகளில் ஆட்சி அமைப்பதற்கும் தூக்கி எறிவதற்கும் காரணமாக அமைந்திருக்கின்றன. உலகின் ஒரு மூலையில் இருக்கும் சாமானியனின் கருத்துக்கூட இந்த உலகில் அனைவரையும் சென்றடையும் அளவில் வலுவடைந்து இருக்கின்றது. மனிதர்களின் வாழ்க்கையில் அ முதல் ஃ வரை அனைத்தையும் முடிவு செய்யும் அளவிற்கு வளர்ந்து விட்ட ஊடகங்கள் மக்களுக்கு தரக்கூடிய கருத்துக்கள் என்னென்ன குறிப்பாக தொலைக்காட்சியின் மூலம் திரைப்படங்கள் மூலம் மக்களுக்கு கிடைக்கும் கருத்துக்கள் ஆரோக்கியமாக உள்ளனவா என்று சற்று ஆராய்ந்தால் மிக சில கசப்பான உண்மைகளை நமக்கு கிடைக்க வரும். சமூகத்தை திருத்த வேண்டும் என்ற நோக்கிலோ சமூகத்திற்கான நற்பணிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று நோக்கிலோ நாங்கள் ஊடகங்களில் பொருண்மைகளை வடிவமைக்க வில்லை எங்களுக்கு தேவையானதெல்லாம் மக்களுக்கு தேவையான பொழுதுபோக்கினை தருவதும் அதன் மூலம் வருவாய் பெறுவதும் தான் என்பது உலக நிறுவனங்களின் வாக்குமூலமாக இருக்கின்றது. மலிவான சரக்குகளை விற்று தான் மக்களிடம் பணம் பெற வேண்டுமா அவர்களுக்கு கொடுப்பதற்கு நம்மிடம் உயர்வான பொருண்மைகள் எதுவும்

இல்லையா என்றால் நிறைய இருக்கின்றன. திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சிக்கான கதைகளை மட்டும் எடுத்துக் கொண்டாலே தமிழ் ஆங்கில உலக இலக்கியங்களில் கொட்டிக் கிடக்கும் கதை புதையல்கள் ஏராளம். அப்படிப்பட்ட புதையல் தான் தமிழ் இலக்கியத்தில் காணப்படும் சங்க இலக்கியங்கள் சங்க இலக்கியங்கள் என்பது நம் முன்னோர் நமக்கு கொடுத்த ஒரு மிகப்பெரிய வரப்பிரசாதம் இந்த வரப்பிரசாதத்தை நாம் தமிழ் சினிமா ஏற்றவாறு கையாண்டால் தமிழ் சினிமா தரம் உலக சினிமா அளவுக்கு ஏன் அதற்கு மேலும் பண்பட்டு நிற்கும் என்பது எதார்த்த உண்மை.

நெடுந்தொடர் திரைப்படம் என்ற பொழுதுபோக்கு நிகழ்ச்சி இல்லாத தொலைக்காட்சியே இல்லை எனும் அளவுக்கு தங்கள் அன்றாட ஒளிபரப்பு நிகழ்ச்சிகளில் பாதிக்கும் மேலான நேரத்தை நெடுந்தொடர்களும் திரைப்படங்களுக்கும் ஒத்திக்குகின்றன. தொலைக்காட்சி சேனல்கள் சற்று அழுத்தமாக சொல்ல வேண்டுமென்றால் நெடுந்தொடர்கள் இல்லாத தொலைக்காட்சி வெகுசர மக்களால் கண்டு கொள்ளாமல் விடப்படுகிறது என்கிற அளவுக்கு அன்றாட மக்கள் வாழ்வில் ஒன்றிப்போன இத்தகைய நெடுந்தொடர்களை இலக்கிய கண்ணோட்டத்தோடு நோக்கும் பொழுது பெரும்பாலான எல்லா தொடர்களும் ஒரு சூத்திரத்திற்குள் அடங்கிப் போய் விடுவதை உணரலாம் நுண்கலை உணர்ந்து போற்றுவதற்கு நுட்பமான உணர்வும் வேண்டும் ஓய்வான அமைதியும் வேண்டும் மக்கள் நன்கலையை பெரிதும் போற்றவில்லை எனில் அது அவர்களின் குறையன்று கலைக்கு உரிய அளவில் அவர்களுக்கு ஓய்வும் அமைதியும் நல்காத காலத்தின் குறை அது வாழ்க்கை போக்கின் குறையது என்ற மூவா அவர்களின் கூற்றுப்படி வாழ்க்கை இயந்திரத்தனமாய் போய்விட்டது அதனால் கலைத்தன்மையை பற்றி கவலைப்பட நேரமில்லை எனவே தொலைக்காட்சி திரைப்படம் போன்ற ஊடகங்களும் கலைத்தன்மையை பற்றி கவலைப்படாமல் பார்த்து பார்த்து சலித்துப்போன கதைய அம்சங்களையும் பணமாக்கி தருகின்றன இத்தகைய தொலைக்காட்சி தொடர்களிலும் திரைப்படங்களிலும் சளி பூட்டும் அளவுக்கு கலை வளர்ச்சி நிலவுவதற்கு சில காரணங்களை முன் வைக்கலாம்.

1. இலக்கியத்திற்கும் சினிமா இயக்குனர்களுமான இடைவெளி.
2. ஒரு திரைப்படத்தின் அனைத்து பகுதிகளிலும் (கதை, திரைக்கதை, வசனம், இயக்கம், ஒளிப்பதிவு, பாடல்கள்) தான் ஒருவரே சாதித்ததாக இருக்க வேண்டும் என்ற எண்ணம்.
3. இலக்கிய படைப்பாளிகள் தங்கள் படைப்புகளை திரை மொழிக்கு தகுந்தவாறு மாற்ற அனுமதிக்காதது.

என்ற பல்வேறு கருத்துகளை முன் வைக்கலாம். நூற்றாண்டு விழா கண்டிருக்கும் இந்திய திரைப்படத் துறைக்கும் இலக்கியத்திற்குமான பிணைப்பு என்பது நீண்ட வரலாற்றைக் கொண்டது. தொடக்க காலத்தில் சினிமாக்களுக்கான கதைகளை புராண, இதிகாச கதைகளை விளங்கின. அதனை தொடர்ந்து இடைக்காலத்தில் காப்பியங்களும் நாடகங்களும் திரைப்படமாக்கப்பட்டன. 1935 இல் தொடங்கி வடுவூர் துரைசாமி ஐயங்கார், வை.மு. கோதைநாயகி, தி. ஜானகிராமன், நாஞ்சில்நாடான், புதுமைப்பித்தன், கல்கி, நாமக்கல் கவிஞர், அண்ணா, மூ.வ அகிலன், பி. எஸ். ராமையா, கீ.ரா, சுஜாதா, ஜெயகாந்தன், கலைஞர் மு கருணாநிதி, நீல பத்மநாபன் போன்றோரின் நாவல்களில் சில திரைப்படங்களுக்குரிய கதைகளாகின. தற்பொழுது சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்டும் தேசிய அளவில் விருது பெரும் அளவுக்கு குறும்படங்கள் எடுக்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் இதுவரை 200க்கு குறைவான படைப்புகளே திரைப்படமாக்கப்பட்டுள்ளன. இவ்வரிசைகளில் இன்னும் படமாக எடுக்கப்படாது எத்தனையோ கதைகள். எண்ணைக்கையற்று கொட்டிக்கிடக்கின்றன. மகேந்திரன், பாலுமகேந்திரா போன்ற இயக்குனர்கள் மிக அழகாக இலக்கியங்களை திரை மொழிக்கு தகுந்தாற்போல் மாற்றி அவற்றை திரைப்படங்கள் ஆக்கி வெற்றி பெற்றனர். ஆனால் இலக்கியத்தை மறந்து விட்ட இன்றைய சினிமாக்காரர்கள், இலக்கியத்தை படித்தறியாமலும் இலக்கியத்தோடு தன்னை பிணைத்துக் கொள்ளாமலும் நல்ல கதைகளை இப்போது கிடைப்பதில்லை எனக் கூறுவது அத்தகைவர்களின் அறியாமையை காட்டுகிறது.

## சங்கப் பாடல்களை படமாக்கல்

மக்கள் மத்தியில் மட்டில்லா ஊடகத்தை காட்டிலும் காட்சி ஊடகமே செல்வாக்கான தாகவும் ஆற்றல் வாய்ந்ததாகவும் காணப்படுவதால் தமிழ் பண்பாட்டை மக்கள் போற்றிடவும் தொடர்ந்து வளர்த்தெடுக்கவும் சாதி மதம் அரசியல் பொருளாதார ஏற்றத்தாழ்வு தனிமனிதர் சார்பு ஆகிய யாவற்றையும் கடந்த காதல் ஓவியமாக சங்கப் பாடல்களை படமாக்கி காட்டலாம் (Varadarajan, 1953). சங்க இலக்கியங்களில் 1762 அகப்பாடல்களை உடையன ஒவ்வொரு பாடலிலும் ஆண் பெண் உள்ளங்கள் உள்ளன அப்பாடல்களை கற்பவர் 3724 காதல் உள்ளங்கள் பற்றிய அறிவு பெறும் மேலும் தலைவன் தலைவர் பற்றி பாங்கான் நினைத்தனமும் ஊரார் கண்டார் நினைத்திடவும் ஆகிய பல்வேறு உள்ளங்களின் அறிவினையும் பெறுவர் என்பார் வாசுபமானிக்க மாணிக்கனார் (Manikkam, 2012). எனவே நெடுந்தொடர்களாக எடுக்கப்பட்ட இதிகாசங்களான மகாபாரதம் ராமாயணம் ஆகியவற்றை போல் நாடகத் தன்மையோடு விளங்கும் அறிய சங்க இலக்கிய பாடல்களை எளிய முறையில் காட்சி வடிவில் உள்ளம் கவரும் உரையாடலில் அவற்றை உருவாக்கிய புலவனின் கருச்சிதைையாமல் தொடர்ச்சியான கதைப்போக்கில் தமிழ் தமிழரின் அழகா வாழ்வை புற வாழ்வையும் இணைத்து நெடுந்தொடர் ஆக்கி காட்டலாம் (Mathaian, 2009).

## சங்க கவிதையின் சிறப்பு

ஒரு கதை நிகழ்வதற்குரிய கதைக்களம் நிலப்பின்னணி (Location) காட்சிப்படுத்தும் காலம் (Time) கலைப்பின்னணி (Art) உரையாடல் (Dialogue) ஆகிய அனைத்து அம்சங்களையும் சங்கப் புலவன் ஒரு இயக்குனனைப் (Director) போலவே ஒரு கலை இயக்குனனைப் (Art Director) போலவே ஒரு திரைக்கதை ஆசிரியனை (Screenplay Writer) போலவே காதல் காட்சிகளை ஒரு ஒளிப்பதிவாளன் பதிவாக்குவதை போல் எழுத்தில் வடித்துச் சென்றுள்ளான்.

திருமணத்திற்கு முன்பான காதல் களவு வாழ்க்கை நெகடுகளையும் திருமணத்திற்குப் பின்பான வாழ்க்கை நிகழ்வுகளையும் அம்மக்களின் மிக நுண்ணிய மன உணர்வுகளும் சங்க பாடல்களில் பலரது கூற்றில் பல்வேறு துறைகளாக அமைத்து தொகுக்கப்பட்டுள்ளன இத்தகைய சங்க பாடல்களை திரைக்குட்பாடு பின்னணியில் மிக நுட்பமாக உள்வாங்கி அத்தனை நிகழ்வுகளை ஒரு தொடர் நிகழ்வாக தொகுத்து காட்சிப்படுத்தலாம் அல்லது ஒரு தனி பாடலை காட்சிப்படுத்தலாம்.

## தனிப்பாடல்களைத் தொடர்நிலைகளில் காட்சிப்படுத்துதல்

பல்வேறு நிகழ்வுகளின் பிணைப்பும் தொகுப்பும் தான் கதை ஆகிறது அதைப்போல சங்க பாடல்கள் தொடர் நிலையற்ற தனித்தனித்துறை பாடல்களை என்றாலும் அவற்றில் கூறப்பட்டுள்ள நிகழ்வுகளை நிழல் படுத்தி காட்சிப்படுத்த வாய்ப்பு உள்ளதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மலை சார்ந்த பகுதியிலே உள்ள தினைப்புனத்தில் முற்றி விளைந்துள்ள தினைக்கதிர்களை உண்ணவரும் கிளிகளை விரட்ட தோழியோடு தலைவியை அனுப்புகிறாள் தாய், அங்கு வந்த தலைவன் தலைவியை சந்திக்கிறான். அவர்களுடைய காதல் மலர்கிறது. காதலுக்கு தலைவியின் தோழியும் தலைவனின் தோழியும் துணை நிற்கின்றனர். செம்மண்ணிலே கலந்த தண்ணீரைப் போல் ஒன்று கலந்தது நம் நெஞ்சம். ஆதலால் ஒருநாளும் உன்னை கைவிட மாட்டேன் என்கிறான் தலைவன். நாள் பல கடந்து யாரும் அறியாமல் இரவும் பகலும் சந்திப்பு நீண்டு கொண்டே போகிறது. தனக்கும் அவனுக்குமான உறவுக்கு, சாட்சியாய் இருந்த நாரைகூட மீனை அல்லவா பார்த்துக் கொண்டிருந்தது. தலைவன் வாக்குப் பொய்த்தால் என்னாகுமோ என பயந்தாள் தலைவி. தலைவிமேல் அக்கறை கொண்ட தோழி பார்க்கிறாள். யாரும் அறியாமல் இப்படி மறைவாய் சந்தித்து உறவாடுவதை விடுத்து, ஊரறிய விரைவில் திருமணம் செய்துகொள்ள சடைமடையாய்ச் சொல்லிப்பார்த்தாள், பயனில்லை, நேரடியாகவே சொன்னாள். தலைவிக்கு நேர்ந்த துன்பத்தை, காதலில் உடல் மெலிந்த தலைவியை கானகத்து அணங்கு தீண்டியதோ என கவலையுற்ற தாய், தெய்வத்தை வேண்டி வெறியாட்டு செய்கிறாள் அணங்கினால் வந்ததல்ல அவனால் வந்தது என்று குறிப்பால்

உணர்த்துகிறாள் தோழி. ஊரோவை பழித்துப் பேசுகிறது, வீட்டில் சிறை வைக்கிறாள் தாய், உடன்படவில்லை பெற்றோர், தலைவனோடு உடன்பட்டு உடன்போக்குப் போய் விடுகிறாள் தலைவி. தேடி அலைந்து வாடி நிற்கிறாள் தாய். வழியே வந்தவன் யாழிலிருந்து வரும் இசையால் யாழுக்கு என்ன, பயன்? யார்கேட்டானோ அவனுக்கே பயன் என்கிறான். பால் சோறு உண்டு செல்வ செழிப்பில் வாழ்ந்த மகள், கணவனின் வறுமை குடும்பத்தில், தன் வறுமை நிலையில் தெரியாதவாறு பொழுது மறுத்து உண்கிறாள். இதைக்கண்ட தாய் இத்தகைய ஒழுக்கத்தை எங்கு கற்றாளோ என பெருமிதப்படுகிறாள். இப்படிப் பல பாடல்களை தேவைக்கு ஏற்ப இணைத்து தொடராக சங்கத்தமிழரின் காதல் வாழ்வை படமாக்கலாம்.

## தனி பாடல்களைத் தனிநிலையில் காட்சிப்படுத்துதல்

மேற்குறிப்பிட்டவாறு தனிபாடல்களை தொடர்நிலையில் காட்சிப்படுத்துவதைப் போல தனிப்பாடல்களைத் அவற்றில் வரும் குறியீடுகளாலும் படிமங்களாலும் அப்பாடல் உணர்வுகளை தனி நிலையிலும் காட்சிப்படுத்தலாம். நாடகப் போக்கில் அமைந்த கலித்தொகை பாடல்கள் இத்தகைய காட்சிப்படுத்துவதற்கு பொருந்தி வருவன

## காட்சிப்படுத்தத் துணையாகும் தொல்காப்பியம்

சங்க இலக்கியப் பாடல்களை காட்சிப்படுத்த தொல்காப்பியம், நம்பியகப் பொருள் உள்ளிட்ட பொருள் இலக்கண நூல்கள் பெரிதும் துணை செய்கின்றன (Ilampuranar, 1974). இன்னும் ஒரு படி மேலே சொல்ல வேண்டுமானால் தொல்காப்பிய பொருளாதாரத்தையே காட்சி படமாக எடுக்கலாம்.

## முடிவுரை

அள்ள அள்ள குறையாத அட்சய பாத்திரமாய் விளங்கும் தமிழ் இலக்கியங்களில், ஊடங்களுக்கென்று ஏராளமான கதைகருக்கள் கொட்டி கிடைக்கின்றன. அவற்றுள் தலைசிறந்த ஒன்றாக சங்க பாடல்கள் விளங்குகின்றன. தமிழ் செவ்வியல் இலக்கியங்களை மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்கும் நோக்கில் பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபட்டு வரும் செம்மொழி தமிழ் ஆய்வு நடுவண் நிறுவனம் சங்க இலக்கியங்களை ஆண்டுதோறும் கருத்தரங்கள் வாயிலாகவும் பயிலருங்கள் வாயிலாகவும் ஆங்காங்கே சில நூறு மாணவர்களுக்கும் ஆர்வலர்களுக்கும் கொண்டு சேர்ப்பது போல, நமது பைந்தமிழ் இலக்கியத்தின் பெருமையையும் அவர்கள் வாழ்ந்த முறையையும் காட்சி ஊடகத்தின் வழி அனைத்து தரப்பு மக்களிடமும் கொண்டு சேர்க்கலாம். மத்திய அரசு தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆண்டுதோறும் ஒதுக்கும் பல கோடி ரூபாய் பணம் பயன்படுத்தப்படாமல் திரும்பி அனுப்பப்பட்டு வரும் நிலையில் உண்மையான வணிக நோக்கமற்ற கலைப் படங்களை எடுக்கும் ஆர்வமுள்ள இயக்குனர்களின் துணை கொண்டு சங்க இலக்கியப் பாடல்களை காட்சிப்படுத்தும் திட்டம் ஒன்றினை வகுத்து செயல் படுத்த படுமேயானால் நமது மக்கள் மத்தியில் மட்டுமல்லாது அனைத்து உலக நாடுகளில் உள்ள மக்களும் தமிழ் பண்பாட்டை அறிந்து போற்றும் அழியாத ஆவணமாய் சங்க பாடல்கள் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

## References

Ilampuranar, (1974) Tholkappiyam Porulathikaram, Saiva Siddhanta Nool Pathippu Kazhagam, Chennai, India

Manikkam, V.S. (2012) Tamilkadhal, Saratha Pathippagam, Chennai, India

Mathaian, P. (2009) Agathinai Kotpadum Sanga Agakavithai Marabum, Pavai Pathippagam, Chennai, India

Varadarajan, M. (1953) Kurunthogai Virunthu, Pari Nilayam, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License